உ

ஐந்தாவதாண்டு

அறிக்கைப்பத்திரம்.

இராக்கத—நளவரு

# கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

(பதிவுசெய்யப்பெற்றது.)

தஞ்சை.

விரோதிகிருதுவரு
வைகாசிமீ கஉ
நிறுவப்பெற்றது.

TRICHINOPOLY.
S. GEORGE & Co., PRINTERS.
1916.

# கரந்தைத் தமிழ்ச் சங்கம்,

## தஞ்சை.

---

தமிழ் மொழியின் அபிவிருத்தி கருதியும், தமிழரது மேம்பாட்டை எண்ணியும், இச்சங்கம் விரோதிகிருது ௵ வைகாசி ௴ ௧௨ தாபிக்கப் பெற்றது. ஆலோசனை சபையிலுள்ள மாட்சிமிக்க இந்தியா கவர்னர்-ஜனரல் அவர்களது பாஷை, சாத்திர சம்பந்தமான சபைகளைப் பதிவு செய்வதற்கான 1860-ம் வருடத்திய 21-வது சட்டப்படி இச்சங்கம் பதிவு செய்யப்பட்டுளது. தமிழ் மொழியன்பும், தமிழ் நன்மக்களிடத் தார்வமும் கொண்டுள்ள அருந் தமிழன்பர் யாவரும் இச்சங்கத்தின் அங்கத்தினராகும்படி கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள்.

R. வேங்கடாசலம்,
காரியதரிசி.

---

## அடியிற்கண்ட அருமையான புத்தகங்கள் சங்கத்தில் விலைக்குப் பெறலாகும்.

---

சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கின்றன.

---

| | ரூ. அ. ப. |
|---|---|
| உபந்நியாசங்கள் | 0—4—0 |
| வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி | 0—4—0 |
| பிரசங்கங்கள் | 0—2—0 |
| ஆசாறுற்றுப்படை | 0—1—0 |
| கரிகாற் சோழன் | 0–12—0 |
| சங்கத்தின் விதிகள் | 0—2—0 |

பிராணி சாஸ்திரம், கணக்குப்பதிவு நூல் முதலியனவும் கிடைக்கும்.

---

# கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

(பதிவுசெய்யப்பெற்றது.)

தஞ்சை.

## ஐந்தாம் ஆண்டின் அறிக்கைப்பத்திரு!

இராக்கத—நளவருடம்.

இனம் பொருந்திய அக்கிராசனாதிபதியவர்களுக்கும், மற்றைக் கனவான்களுக்கும் உரிமை விண்ணப்பம்.

தமிழபிமானப் பெருந்தகையாளர்களே!

'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' எனப் பெயர்பெற்ற இச்சங்கம் தொடங்கி ஐந்து ஆண்டுகள் ஆயின. இந்த ஐந்து ஆண்டுகளாகத் தமிழ்மொழியின் முன்னேற்றத்திற்காகச் சங்கத்தார் செய்துவந்த ஊழியங்கள் தமிழுலகம் எங்கும் அறியக்கிடந்தன பல. அங்கத்தினர்களையும், ஆதரிப்பாளர்களையும் ஈட்டி, அடுத்தநகரிற் கிளைச்சங்கம் ஒன்றினை நாட்டிக், கலைமகள் ஆக்கத்தினையும், திருமகள் நோக்கத்தினையுஞ் சூட்டி, நூற்பயிற்சி சபை, பிரசங்க சபைகளைக் கூட்டி, அவற்றின் வாயிலாக அரும் பெரும் நூற்கருத்துக்களைப் பல்லோர்க்கு இலகுவில் ஊட்டி, சங்கத்திற்கு அரசாங்கத்தினர் மேல்விசாரணையைப் பூட்டி, இன்னும் இத்தகைய நன் முயற்சிகளைக் காட்டி உழைத்து வரும் சங்கத்தாரின் தாய்மொழித் தொண்டுகளை யெல்லாம் அவ்வப்போது வெளியிட்ட ஆண்டுஅறிக்கைகளிற் பரக்கக் காணலாம். இச்சங்கத்தார் செய்து வரும் ஊழியங்கள் தமிழ் மொழியின் பெருமையினையும், அது அடையவேண்டியிருக்கும்

முன்னேற்றத்தின் நிலைமையினையும் நோக்க இறப்பக் கடைப் பட்டனவேயாயினும், இச்சங்கத்தார் தத்தமக்குரிய பற்பல வேலைகளினூடே, இத்துணைச் சிறிய காலத்தே, இவ்வளவாதல் இயற்றியிருப்பதை நோக்கித் தமிழகம் மகிழகம் கொள்ளு மென்றே நம்புகிறோம்.

நான்காம் ஆண்டின் திருவிழா.

நடந்த இராக்கத ஞு புரட்டாசிமீ உ, ந, தேதிகளில் இவ்விழா நடந்தேறியது. விழாத் தொடக்கத்தே வாத்திய கோஷமும், வான்மாரியும், வாழ்த்துரையும் வரவேற்று மகிழ் வுறுத்த, சபைத் தலைவர் சீமான் திவான் பகதூர் சா. ராம. மு. இராமசாமிச் செட்டியார் அவர்கள், அவர் தம் உள்ளங் குடி கொண்ட சபா நாயகரெனவே அக்கிராசனம் வகித்து நடை பெறுத்த, விஜயம் செய்திருந்த வித்துவ சிரோமணிகள் தாம் தாம் எடுத்துக்கொண்ட விஷயங்களை இனிது பிரசங்கித்து, சபையோர் உள்ளங்களில் அவையிற்றை நன்கு நிலைநிறுத்த, அவ்விழா நடந்தேறிய சிறப்பினை இங்குக் கூடிய நண்பர் பலர் அறிவர். அதுபோது சபையிற் கூடிய நன்மக்கள் எண்ணிலர் இடமின்றித் தத்தம் உள்ளப் பான்மை யெனவே ஒருவரோடு ஒருவர் நெருங்க வீற்றிருந்து அளவளாவி மகிழ்ந்தேகியதும் நண்பர் பலர் அறிவர். விழாக்காலங்களில் நிகழ்ந்த விஷயங்கள் பின் வருமாறு:—

தீர்மானங்கள்.

க. அன்புருக்கொண்டு திகழும் ஆங்கில மன்னர் மன்ன வன், அருளொடு சிறந்த மாட்சிமிக்குடையோன், ஜார்ஜ் கோமகற்குத் தமிழ் மக்கள் பூண்டொழுகும் நன்றி கூறப்பட்டது.

உ. தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த் துதவ மிக்க அன்புடன் திருவுளங்கொண்டு, திருவ னந்தபுரம் சீமான் T. பொன்னம்பலம் பிள்ளை, M. R. A. S., அவர்களைக்கொண்டு இவ்வரும் பணி முடிக்கத்

துணிந்த மாட்சி மிக்க பரோடா நாட்டிறைவர்க்குத் தமிழகத்தார் நன்றி செலுத்தப்பட்டது.

௩. 1916ம் வருட மெற்றிகுலேஷன் பரீட்சைக்கேற்படுத்திய தமிழ்ப்பாடப்புத்தகத்தில் சொற்பிழை முதலியன மலிந்திருந்ததனால், இனி இப்புத்தகங்கள், தக்கார் பரிசோதனையில் பிழையறப் பதிப்பிக்கப்பெற வேண்டுமெனச் சென்னைச் சர்வகலா சங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

## உபந்நியாசங்கள்.

௧. நம் பெண்மக்களின் தற்கால நிலைமை—ஸ்ரீமதி கிருஷ்ணவேணி அம்மாள் அவர்கள், சென்னை.

௨. சங்கங்களின் கடமைகள்—கனம் T. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள், B. A., சென்னை.

௩. நம்மவர் ஆராயத்தக்க சில—கனம் P. V. மாணிக்கம் நாய்க்கர் அவர்கள், B. E., M. C. I., சென்னை.

௪. கல்லாடமும், அதன் காலமும்—கனம் T. V. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள், பாவநாசம்.

௫. சான்றோரினத்திரு—ஸ்ரீமதி பதுமாவதி அம்மாள் அவர்கள், சென்னை.

௬. சத்தி இலக்கியம்—கனம் பக்தவற்சலம் பிள்ளை அவர்கள், B. A., M. B. P. I., சென்னை.

புரட்டாசிமீ ௩௨ பிற்பகல் அக்கிராசனர் அவர்கள் அவசரமாகப் பிரயாணப்பட நேர்ந்தபொழுது, அவர்களுடையவும், சங்கத்தலைவரவர்களுடையவும் உரிமை வேண்டுகோட்கு அன்புடனிணங்கித் தஞ்சாவூர் ஜில்லா தபால் மேல் விசாரணையாளராகிய கனம் T. மாரிமுத்துப் பிள்ளை, B. A., அவர்கள் அக்கிராசனம் வகித்துச் சபைக் காரியங்களை இனிது முடித்தருளினார்கள்.

அக்கிராசனர் கனம் செட்டியார் அவர்களது முகவுரைப் பிரசங்கம் அவர்கட்கு அருமையாக அமைந்து கிடக்கும் தமிழ்நூலாராய்ச்சி மிகுதியை நன்கு வெளிப்படுத்தியதோடு, இடந்தொறும் இடந்தொறும் பண்டைக்காலத்திருந்த தமிழ் மக்களுடையவும், தமிழ் மொழியினுடையவும் அருமை பெருமைகளை எடுத்துக்காட்டி மெய்ம்மயிர்சிலிர்க்கச் செய்தது. இவ்வுபந்நியாசமும், இதனைப்போன்றே எல்லா நலங்களினு முதிர்ந்து சிறந்த மற்றை உபந்நியாசங்களும் அச்சு வாயிலாக வெளிப்போந்து உலாவவேண்டும் சிறப்பும், இன்றியமையாமையும் உடையனவாதல் பற்றி, அத்தகைய சீரிய உபந்நியாசங்களைத் தயவு செய்து எழுதியனுப்புவிக்கும்படி அவரவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவை வரப்பெற்றவுடன், அச்சிட்டு முடிக்கவேண்டும் முயற்சி எடுத்துக் கொள்ள உத்தேசித்திருக்கிறோம்.

அங்கத்தினர்கள்.

ஆண்டுகள் தோறும் அங்கத்தினர் எண் வளர்மதியனையதாகப் பெருகிவரும் வழக்கத்திற்கிணங்கியே இவ்வருடத்திற் புதுவதாகச் சேர்ந்த அங்கத்தினர் எண்ணும் சென்ற வருடத்திற் சேர்ந்தார் எண்ணினும் பெருகி நிற்கின்றது. நமது சங்கத்திற்கு முதல் ஆண்டினில் அங்கத்தினர் பதினால்வராகவே யிருப்பினும், அடுத்த ஆண்டினில் முப்பதின்மராகவும், அதற்கடுத்த ஆண்டினில் அறுபத்தொருவராகவும், கடந்த ஆண்டினில் நூற்றொருவராகவும் பெருகி வந்தனர். இவ்வாண்டில் நம் சங்கத்து அங்கத்தினராகச் சேர்ந்த தாய்மொழி யபிமானிகள் அறுபத்தறுவர். அங்ஙனமாகவும், தத்தம் விருப்பப்படியே தாம் தாம் கொடுக்க விசைந்த சொற்ப சந்தாவையும் கொடுக்க மனமின்றிக் காலந்தாழ்த்திருந்து, இவ்வருடத்தில் தாம் சங்கத்தினின்றும் விலகிக்கொள்ளும் வழியேகியவர்கள் பன்னிருவர். ஆகவே, இவர்தொகை போக இவ்வாண்டில் அங்கத்தினராக நின்றார் ஒரு நூற்றைம்பத்தைவராவர். (அநுபந்தம் க.) தமிழ் மக்களின் தாய்மொழியன்பும், சங்க அபிமானமும் தலைக்கிளம்பும் நற்காலம் இன்றைக்கேயாயினும், இவ்வின்றைக்கே இவ்விடத்தே ஆயிரக்கணக்கான அங்கத்தினர் சேர்ந்துவிடுதலைக் காண்

பது அருமையல்ல. ஆகவே, 'இது எமது தாய் மொழி. இதனைப் புரத்தல் எமக்குக் கடன். இதனைப் புரக்குமாறு முன் வந்த சங்கத்தினராகிய நம் சகோதரர்களுக்கு நாம் ஒவ்வொருவரும் இயன்றவாறு உதவி செய்யவேண்டும்.' என்னும் ஒப்புயர்வற்ற அபிமானம் நம் தமிழ் மக்களுக்குள்ளே விளங்கும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

கூட்டங்கள்.

இவ்வாண்டில் சர்வ அங்கத்தினர் கூட்டம் இரண்டும், நிருவாக சபையார் கூட்டம் இருபத்தொன்றும், ஆக இருபத்து மூன்று காரியக் கூட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. வழக்கம் போலவே உள்ளூர் அங்கத்தினர்க்குள் நடைபெறும் பெரிய புராணப் பயிற்சி சபைகளும் முப்பத்தைந்து நிகழ்ந்திருக்கின்றன. இச்சபைகளின் மூலம் பெரிய புராணத்தில் 820 பாசுரங்கள் உரை பிரசங்கிக்கப் பெற்றிருக்கின்றன.

புத்தகசாலை—கரந்தைத் தமிழ்ச்சங்கக் கலாநிலையம்.

எனப் பெயர் பெறும் இப்புத்தகசாலை, சென்ற வருடங்களில் அபிவிருத்தியாகி வந்திருப்பது போலவே, இவ்வருடத்திலும் சீர்பெற்றிருக்கின்றது. சென்ற ஆண்டினிறுதியில் இப்புத்தகசாலையில் 439 புத்தகங்கள் இருந்தன. இவ்வருடத்தில் சங்கத்தில் விலைக்கு வாங்கியனவும், நன்கொடை வந்தனவுமாகச் சேர்ந்தன தொண்ணூற்றொன்பது நூல்களாம். (அநுபந்தம் உ). ஆக இப்போது கலாநிலையத்திலிருக்கும் நூல்களின் மொத்த எண் 538. அங்கத்தினர்க்கு மிக்க உபயோகமாகவுள்ள இக் கலாநிலையத்தைத் தமிழ்மக்கள் நன்கொடை நூல்கள் மூலமாக ஆதரித்து முன்னேறச் செய்யவேண்டுகிறோம். நம் புத்தகசாலையில் அங்கத்தினராவார்க்குப் பலபடியாக உபயோகப்பட வேண்டி இவ்வருட முதல் சங்கத்திலிருந்து சுதேசமித்திரன் தினப்பதிப்பு முதலிய தமிழ்ப் பத்திரிகைகள் வரவழைக்க உத்தேசித்திருக்கிறோம். மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் வழக்கம் போலவே தம் பிரசுரங்களை அன்புடன் அனுப்பியுதவுகின்றனர்.

எமதுநோக்கம்.

சங்கத்தின் நோக்கங்கள் முற்றுப் பெறுவதற்கான வழிகளுட் சில கீழ்க் குறிக்கப் பெறுகின்றன:—

## க. செந்தமிழ்க் கைத்தொழிற் கலாசாலை.

சென்ற ஆண்டினில் அறிக்கையிட்ட இவ்விஷயத்தின் முயற்சி இவ்வாண்டினில் வெளிப்பட்ட பயனைத் தோற்றுவிக்கக் கூடாவிடினும் நன்கு நிறைவேறியிருக்கிறது. அதன் பயனைக் கலாசாலைத் துவக்கம் முன்னரே ஏற்படக்கூடியதாய் விட்டாலும் இடவசதியில்லாமைபற்றியே இதுகாறுந் தாழ்த்திருந்தது. எல்லாம் வல்ல இறைவன் திருவருளை முன்னிட்டு இக்கலாசாலைத் துவக்கம் ஒரு சுபதினத்தில் ந௳-து சங்க ஆதரிப்பாளருளொருவராகிய சீமான் வா. கோபாலசாமி இரகுநாத இராசாளியார் அவர்களால் நடைபெறவிருக்கிறது.

## உ. இலவசப் படிப்பிடம்.

நம் அருந்தமிழ் மக்களின் அறிவைப் பரவச்செய்வதற்கென சங்கத்தின் வகுப்பாக ஒரு இலவசப் படிப்பிடம் நடைபெற்று வருகிறது. இதில் சங்கத்தின் அங்கத்தினரேயன்றி யாரும் யாதொரு சந்தாவும் செலுத்தவேண்டிய அவசியமில்லாமல் புத்தகம், பத்திரிகை முதலியவற்றைப் படிக்கலாகும்.

## ௩. தமிழமாணவர் விடுதி.

இம்மாணவர் விடுதி இராக்கதஞு ஆனிமீ உகவ (5–7–15) திருச்சியில் தாபிக்கப்பட்டது. சங்கத்தார் எவ்வித இலாபமும் கருதாமல் தமிழமாணவரின் நன்மைக்காகவே தாம் செய்யவேண்டியிருக்கும் பற்பல காரியங்களினும் இதை முதன்மையாக வைத்து நடத்த உத்தேசிக்கிறார்கள். ஆகலின், மாணவர்கள் இவ்வுண்மையினைச் சிந்தித்து இதனை நன்கு ஆதரித்துச் சுகமடையுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## ௪. பத்திரிகை.

சென்ற ஆண்டினிற் கூறியபடி பத்திரிகை நடாத்துதற்கு வேண்டுஞ் சாதனங்களை அமைத்து வந்ததில் அதுவும் சீக்கிரத்தில் துவக்கக் கூடுமானதாயிருக்கிறது.

## ௫. தமிழ்ப் பரீட்சைகள்.

சென்ற வருட அறிக்கையில் வெளியிட்டபடி சங்கத்தில் நடைபெறற்பாலதாகிய அங்கத்தினர் பரீட்சைக்கு இம்முறை யாரும் முன்வரவில்லை. ஆயினும் பரீட்சைப் பாடங்களின் தகுதியை நோக்க அடுத்த ஆண்டிற் பல்லோர் வெளிவரலா மென்று நம்ப இடமிருக்கின்றது.

கணக்குப்பதிவுநூற்பரீட்சை குறிப்பிட்டபடி 1916௵ ஜனவரி௴ 30௳ நடந்தேறியது. இப்பரீட்சைக்குவர விண்ணப்பம் செய்து கொண்டவர் நால்வர். கோயமுத்தூர் ஜில்லா, திருப்பூரில், ஸ்ரீமான் Dr. P. வரதராஜலு நாயுடு அவர்கள் மேற்பார்வையில் பரீட்சிக்கப் பெறவிருந்த இருவர் பரீட்சைக்கு வரவில்லை. அடியிற் குறிக்கப்பெற்ற இருவர் திருச்சிராப்பள்ளியில் பண்டிதர் ஸ்ரீமான் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் மேற்பார்வையில் பரீட்சிக்கப் பெற்றுத் தேறியிருக்கிறார்கள்.

க. T. A. கனகசபாபதி பிள்ளை, 16 தொண்டைமான் சந்து, திருநெல்வேலி—இரண்டாவது வகுப்பு—இரண்டாவது பரிசு வெள்ளிப்பதக்கமும், தகுதிச் சீட்டும்.

உ. உமையொருபாகம் பிள்ளை, தலைமை உபாத்தியாயர், R. V. கஸ்தூரிப்பள்ளிக்கூடம், கொங்கன்குளம், மாரனேரி போஸ்டு, சாத்தூர் தாலூகா-இரண்டாவது வகுப்பு—தகுதிச்சீட்டு.

## ௬. கல்விக்காகப் பொருளுதவி.

தஞ்சை, கருந்திட்டைக்குடி, நாராயணக்கொத்தன் தெருவிலிருக்கும் கோ. அமிர்தலிங்கம் என்னும் மாணவர் தம் படிப்

பிற்குச் சங்கத்திலிருந்து பணவுதவி நாடி எழுதிய மனுவின் பேரில், அதற்காகத் தம்பெயரை வெளியிடாது பணம் உதவிச் சங்கத்தைக் கௌரவித்த ஒரு புண்ணிய சீலரின் நன்கொடையிலிருந்து, மாதம் மூன்று ரூபாவீதம் மனுதாரருக்கு அவர்தம் யோக்கியதையைப் பொறுத்துக் கொடுத்து வருகிறதென்று தீர்மானிக்கப்பட்டது. இவ்வுண்மைத் தமிழபிமானியின் மேலான நோக்கம் மற்றைத் தமிழ்ச்செல்வர் பாலும் நிகழ்ந்து தமிழச்சிறுர்களில் பொருட் பேறின்றிக் கல்விப்பயிற்சியில் நழுவிவிழுவாரைக் கைதூக்கிவிடுமாறு அருள்புரிய எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

## கிளைச்சபை.

திருச்சியில் தாபித்துள்ள நமது கிளைச்சபை, தாய்ச் சங்கத்தொடு ஒற்றுமை பூண்டு சங்கமுன்னேற்றத்திற்கு வேண்டியபடி உழைக்கும் அபிமானிகளே பொருந்திய தொன்றுயிருக்கிறது. இக்கிளைச்சங்கத்தின் ஆதரவில் ஏற்படுத்திய மாணவர் விடுதிக்கு இதன் அங்கத்தினர்பலரும் கூடியவரை மெய்யுதவி கையுதவிபுரிந்து வந்திருக்கின்றனர். இவர்கள் தத்தமக்குரிய கௌரவநிலையினைச் சிறிதும் பொருட்படுத்தாமல், மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்டுஞ்சார், செவ்வியருமையும் பாரார், அவமதிப்புங்கொள்ளார், கருமமேகண்ணுயினராகி உழைத்த உண்மைத் தமிழ்த்தாய்த் தொண்டினைச் சங்கத்தார் உளமகிழ்ந்து கொண்டாடி அவர்பாங்கில் என்றும் மறவா நன்றியினைச் செலுத்துங் கடப்பாடு பூண்டிருக்கின்றனர். இக்கிளைச் சங்க நடபடிக்கைகளின் விபரங்களை அக்காரியதரிசியார் எழுதிய தனி அறிக்கை (அநுபந்தம் ௩) யிற்காண்க.

## வருவாய்.

சங்கத்தின்வருவாய் கடந்த ஆண்டுகளிலிருந்தபடியே, அங்கத்தினர் சந்தாவில் வசூலாகும் சிறிய தொகையும், சிற்சில வகையில்வரும் நன்கொடையுமேயாகும். தமிழ்மக்கள் தம் வீடுகளில் நடைபெறும் சுபசோபனதிச் சடங்குகளில், தம் தாய்மொழி யபிவிருத்தியைக் குறித்து, இயன்றவரை நன்கொடை புரிந்துவரும் புண்ணியத்தின் கண்ணியத்தைப் பற்

றிச் சென்ற ஆண்டு அறிக்கைகளிற் குறிப்பித்திருக்கிறோம். அத்தகைய உத்தம நெறியினைச் சித்தத்திற்கொண்டு அடியிற் கண்டபடி தமிழபிமானச் சிலர்கள் இவ்வருடத்தே சங்கத்திற்கு நன்கொடை புரிந்திருக்கின்றனர்:—

க. ஸ்ரீமான் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் அவர்கள், M. R. A. S., ஆண்டிப்பட்டி ஜமீன்தார், சகோதரியார் திருமணம்—ரூ. 50.

உ. ,, R. திருஞானம் பிள்ளை அவர்கள், தனுக்கோடி, திருமணம்—ரூ. 10 பெறுமான புத்தகங்கள்.

௩. ,, T. M. இராம்தாஸ் ராவ் மாடிக் அவர்கள், தஞ்சை, திருமணம்-ரூ. 3 பெறுமான புத்தகமும் பணமும்.

௪. ,, கு. பேச்சுமுத்துப் பிள்ளை அவர்கள், சுங்கந்திடல், கிரகப்பிரவேசம்—ரூ. 2 பெறுமான புத்தகம்.

௫. ,, ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை அவர்கள், கரந்தை, கிரகப்பிரவேசம்-ரூ. 1-12-0 பெறுமான புத்தகம்.

௬. ,, வீ. சுப்பராய பிள்ளை அவர்கள், கரந்தை, சந்ததிப்பேறு—ரூ. 8 பெறுமான புத்தகங்கள்.

௭. ,, R. கிருஷ்ணசாமி பிள்ளை அவர்கள், குளித்தலை, மகப்பேறு—ரூ. 1 பெறுமான புத்தகம்.

௮. ,, வீ. நாராயணசாமி பிள்ளை அவர்கள், புதுக்கோட்டை, காதணிமங்கலம்—ரூ. 10 பெறுமான புத்தகங்கள்.

௯. ,, த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், B. A., B. L., கரந்தை, மனைவியாரை நினைவுகூர—ரூ. 5 பெறுமான புத்தகங்கள்.

௰. ,, N. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், திரிசிரபுரம், தந்தையார், சகோதரர் திதி—ரூ. 3-12-0.

௰க. ஸ்ரீமான் S. A. சாம்பசிவம் பிள்ளை அவர்கள், ஜயபுரம், தந்தையார் திதி—ரூ. 1 பெறுமான புத்தகம்.

௰உ. ,, அ. கணபதி பிள்ளை அவர்கள், திரிசிரபுரம், அன்னையார் திதி—ரூ. 1.

௰ங. ,, G. வன்மீகநாத பிள்ளை அவர்கள், திரிசிரபுரம், தந்தையார் திதி—ரூ. 0-2-0.

இவற்றையன்றி, ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியார் அவர்கள், நமது சங்கத்தின் ஆண்டுத்திருவிழாவுக்கு வழக்கமாக உதவிவரும் நூறு ரூபாயுடன், தமிழுடையவும், தமிழ்மக்களுடையவும் அபிவிருத்திக்காகும் வழிகளில் உபயோகிக்கும் பொருட்டு இருநூறு ரூபாயும் உதவியிருக்கிறார்கள். இவர்களைப் பின்பற்றிய மற்றைத் தமிழ்மக்களும் தங்கள் தங்கள் தாய்மொழி யபிமானத்தை வெளியிடக்கூடும் சமயங்களில் தவறாது வெளியிடுவார்களென எதிர்நோக்குகின்றோம்.

நீர்வளம், நிலவளம், குடிவளங்களி லொப்புயர் வில்லாது சிறப்பித்துக் கூறப்பட்டுத் தொன்று தொட்டு நற்காரியங்களுக்குப் புரிந்துவரும் கொடைத்திறத்தில் முதன்மை பெற்றிருக்கும் நம் சோழவளநாட்டில் பற்பல ஊர்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள குடிமக்கட்கு நம் தாய்மொழியின் அருமையினையும், அதனை ஆதரிக்கவேண்டும் ஆவசியத்தினையும் எடுத்துக் கூறி, ஆங்காங்கு அங்கத்தினர்களையும், அவரவர் மனமுவந்து ஈயும் நெல்முதலிய எத்திறத்த பொருள் வகைகளையும் சேகரித்து வருகிறதென்று உத்தேசித்தபடி, குளமங்கலம், கூடலூர், குருங்களூர், ஆலத்தூர், சந்தலை, மேலைக்கற்கண்டார்கோட்டை ஆகிய ஊர்களுக்குப்போய் பற்பலவிதமான உதவிகளைப்பெற்றிருக்கின்றோம். அங்கத்தினர்களின் மற்றை வேலை மிகுதியாலும், எதிர்பாராத சில அசௌகரியங்களாலும் இவ்வருடத்தில் இன்னும் அதிக ஊர்களுக்குப்போகவில்லையாயினும், வரும் வருடத்தில் இவ்வழியே அதிக முயற்சிசெய்ய உத்தேசித்திருக்கிறோம். மேற்கூறிய ஊர்களுக்கு நாங்கள் போயிருந்த காலங்களில் அவ்வூர்வாசிகள் எங்களை இன்முகத்தோடு வரவேற்று, பற்பலவிதத்தில் உபசரித்து உதவியனுப்பிய பெருந்தன்மை

யினைக்குறித்து அவர்கட்கு எங்கள் நன்றியறிவினைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இங்ஙனமே மற்றை ஊர்களிலுள்ள தமிழ்மக்களும் தமது தொன்றுதொட்டபுகழினைநாட்டிச் சங்கத்தை ஆதரிப்பார்களெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இடம்.

நமது சங்கம் தனது ஆதரிப்பாளருள் ஒருவராகிய ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியாரவர்கள் அகத்தையே தனதகமாகக்கொண்டு அதனை விட்டகலாது பற்றிக்கொண்டமையின், அவர்கள் இதற்கு ஓர் தனியகம் அமைத்தருளவிரும்பி வேண்டுவனபுரிய உத்திரவிட்டிருக்கிறார்கள். எனினும், தக்க இடவசதி இன்னும் கிட்டவில்லையாதலின் வழக்கம்போலவே நமது சங்கத்திற்கு இன்னும் இடக்குறை நீங்கிற்றில்லை எனவேண்டிற்று. ஆயினும், நமது சங்கத்தலைவரவர்கள் முயற்சியின் மேல் இவ்வாண்டினில், தர்மாபுரம் டிப்டிகலெக்டர் கனம் வேங்கடசாமி நாயுடு, B. A., அவர்கள் முன்வந்து, இவ்வூர்க் கடைத்தெருவிலுள்ள, காலஞ்சென்ற ஸ்ரீ வாசுதேவ நாய்க்கரவர்களுக்குச் சொந்தமாகிய, சத்திரத்தை சங்கத்தின் உபயோகத்திற்காக ஆறு வருடங்களுக்கு வாடகையன்னியில் அனுபவித்துக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வழக்கம்போலவே, பெருங்கூட்டங்கள் முதலிய விசேடங்களை நடத்திக்கொள்ள ஸ்ரீ கந்தப்பச் செட்டியார் சத்திரத்தை அதற்குரியார் தந்துதவி வருகிறார்கள். சங்கத்திற்கு இடவசதிக்குறையினை நீக்கிவைக்கமுன்வந்த கனம் வேங்கடசாமி நாயுடு, B. A., அவர்களுக்கும், கனம் கோவிந்தராஜலு நாயுடு அவர்களுக்கும், கனம் சுப்பராயலு நாயுடு அவர்களுக்கும், சங்கத்தார் மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இரங்கல்.

நம் சங்கத்தின் முன்னேற்றத்திற்கே தமது உழைப்பிலும், ஓய்விலும், இன்னும் உறக்கத்திலுங்கூடக் கண்ணுங்கருத்துமாகவிருக்கும் நம் சங்கத்தலைவரவர்கள் தம் அரும்பெறற் பத்தினியாரை யிழக்கநேர்ந்தமைக்குச் சங்கத்தார் மிகவும் விசனிக்கிறார்கள்.

நம் சங்கம் தொடங்கிய காலமுதல் சங்கத்தின் அபி விருத்திக்காகும் முறைகளை அவ்வப்போது போதித்தும், சங்கத்தார் வேண்டுங்காலங்களிலெல்லாம் சங்கத்திற்கு வந்திருந்து பிரசங்கங்கள் புரிந்தும் சங்கத்தை அபிமானித்து வந்தவர்களான, தஞ்சை, பரி. பேதுரு உயர்தரக் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ வையை. R. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் காலஞ் சென்றதுபற்றிச் சங்கத்தார் மிகுந்த வியாகூலமடைந்திருக்கின்றனர். வித்துவசிரோமணியும், குணநிதியுமாகிய ஐயரவர்கள் குடும்பத்தார்க்குச் சங்கத்தார் தங்கள் நன்றியறிதலினையும், அநுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

நம் அருந்தமிழ்த்தாயிடத்து அழுத்தமான அபிமானம் பூண்டு, தமிழினது ஏற்றத்தையும், பெருமையினையும் உள்ளவாறேயுணர்ந்து பசுமரத்தாணியென அறைந்து விளக்கிவந்த ஸ்ரீ மாகறல் கார்த்திகேய முதலியார் அவர்கள் காலஞ்சென்றது பற்றி இச்சங்கததாரேயன்றி இத்தமிழுலகம் முழுதுமே மனம் வருந்துவதாகும்.

வாழ்த்து.

முன்னர்க் குறித்தபடி பலவாறு நன்கொடையாலும், தூண்டுதலாலும் சங்கத்தை முன்னேறச்செய்யும் வணிகர்சிகாமணியும், சங்கத்தின் ஆதரிப்பாளருமான ஸ்ரீமான் பேத்தாச்சி செட்டியார் அவர்கள் எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் எல்லா நலனும் எய்தப்பெற்று நீடூழிவாழ்வார்களாக. அங்ஙனமே நமது சங்க ஆதரிப்பாளரும், தமதுகொடைத்திறம், நடைத்திறம், புலமைத்திறங்களால் தமிழகமுழுதும் தம்புகழ் பரப்பியவருமாகிய அரித்துவாரமங்கலம் ஸ்ரீமான் வா. கோபாலசாமி இரகுநாத இராசாளியார் அவர்களும் கார்வண்ணங் கொடைப் பெருமான்கருணையால் எல்லாப்பேறுகளும் எய்தி நீடுவாழ்வார்களாக. இன்னும் சங்க விசேடகாலங்களிலும் மற்றமுக்கியமான சமயங்களிலும் தமது மாளிகையையும், வாகனாதிகளையும் வேண்டியபோது வேண்டியாங்குதவி வரும் பிரபு சிகாமணியாகிய பூண்டி ராவ்பகதூர் வீ. அப்பாசாமி வாண்டையார் அவர்கட்கு எங்கள் நன்றியறிதலைச்செலுத்தி அவர்கள் நீடியசுகவாழ்

விற்குப் பிரார்த்திக்கிறோம். சங்கத்தின் இடக்குறையினை விரித்திடக் குறைபாடுண்டாக்கிய கனம் வேங்கடசாமி நாயுடு அவர்களை எங்கள் உளத்திற்பிணித்து, அவர் பெருமையினை உலகிற்கறிவித்து, எல்லாம் வல்லான் முன்னிலையில் நிறுத்தி அவர்க்கு எல்லாமேம்பாட்டினையும் உய்க்கவெனப் பிரார்த்திப்பதன்றி வேறு என்செய்ய வல்லோம். மற்றும் வழக்கம்போலவே விசேட காலங்களுக்குத் தமது சத்திபத்தைத் தட்டின்றியுதவி வரும் ஸ்ரீ சுந்தப்பச் செட்டியார் குடும்பத்தார்க்கும், திருச்சிக் கிளைக் காரியதரிசியார் தமது அறிக்கையிற் குறிப்பித்திருக்கிறபடி, தமிழ மாணவர் விடுதி சம்பந்தமாகப் பலவகையிலும் பேருதவி புரிந்து வந்த பெருந்தகையாளர்களுக்கும்; முன்னரே குறித்தபடி கனவிலும், நனவிலும் சங்கமேம்பாட்டையும், தமிழினதுயர்வையும், தமிழரது அபிவிருத்தியையுமே கருத்திற்கொண்டு எம்மொடுகலந்து உறவு பூண்டு உழைத்துவரும் எங்களருமைத்தலைவர் அவர்களுக்கும், அங்கத்தினர் கனம் M. S. கலியாணசுந்தரமையர் அவர்கள், கனம் I. குமரசாமி பிள்ளை அவர்கள், B. A., கனம் க. சண்முகம் பிள்ளை அவர்கள், B. A., கனம் த. பீ. சோமநாத ராவ் அவர்கள், கனம் T. N. குருமூர்த்தி பிள்ளை அவர்கள், கனம் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்; கனம் சிவ. சோலைமுத்துப்பிள்ளை அவர்கள், கனம் இராமசாமி வன்னியர் அவர்கள், முதலிய இடையறாச்சங்காபிமான சீலர்களுக்கும் எங்கள் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நமது சங்கமும், இது வளர்க்கும் நம்மருமைத் தமிழும், இவற்றையாதரித்துவரும் தம்மருங்கடனுணர்ந்த அங்கத்தினரும், மற்றத் தமிழ்ப் பெருமக்களும், நம்மைப்புரந்தருளும் ஆங்கில இராசராசப் பெருந்தகையும், எவ்வகைச் சீருஞ் சிறப்புமெய்தி, என்றென்றும் நிலவிவாழ்கவெனப் பெருங்கருணைத் தடங்கடலாகிய பேரிறைவன் சீர்ப்ரவி, அவர்தம் திருவடிக் கமலங்களை ஒன்றியமனத்திற் சிந்தித்து வந்திப்போமாக. சுபம்.

| | |
|---|---|
| கரந்தைத்தமிழ்ச்சங்கம்,<br>தஞ்சை,<br>நள ஹூ ஆனிமீ". | R. வேங்கடாசலம்,<br>காரியதரிசி. |

## அநுபந்தம் க.

---

## கரந்தைத்தமிழ்ச்சங்கம்,

## தஞ்சை.

---

### ஆதரிப்பாளர்.

**சீமான் வா. கோபாலசாமி இரகுநாத இராசாளியார் அவர்கள், F. T. S., O. S. E.**

**சீமான் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் அவர்கள், M. R. A. S., ஆண்டிப்பட்டி ஜமீன்தார்.**

---

### சங்கத்தலைவர்.

**சீமான் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், B. A., B. L.**

---

### காரியதரிசி.

**சீமான் R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்.**

---

### பொருளாளர்.

**சீமான் ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்.**

### கணக்குப் பரிசோதகர்.

**சீமான் பா. கலியாணசுந்தரம் பிள்ளை அவர்கள்.**

---

## நிருவாகசபையார்.

| | | | | |
|---|---|---|---|---|
| க | ஸ்ரீமான் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை | அவர்கள், | B. A., B. L. | |
| உ | ,, | R. வேங்கடாசலம் பிள்ளை | ,, | |
| ங | ,, | ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை | ,, | |
| ச | ,, | ஐ. குமாரசாமி பிள்ளை | ,, | B. A. |
| ரு | ,, | சி. தக்ஷிணாமூர்த்தி பிள்ளை | ,, | |
| சு | ,, | த. பீ. சோமநாதராவ் | ,, | |
| எ | ,, | நா. சீதாராம பிள்ளை | ,, | |

---

## அங்கத்தினர்.

| | | | | |
|---|---|---|---|---|
| க† | ஸ்ரீமான் | த. வே. உமாமகேசுவரம் பிள்ளை | அவர்கள், | B. A., B. L., வக்கீல், கரந்தை. |
| உ† | ,, | R. வேங்கடாசலம் பிள்ளை | அவர்கள், | மிராசுதார், மோகனூர். |
| ங†* | ,, | அ. கணபதி பிள்ளை | ,, | உத்தியோகம், திரிசிரபுரம். |
| ச† | ,, | வே. இராதாகிருஷ்ண பிள்ளை | ,, | B. A., உத்தியோகம், தனுக்கோடி. |
| ரு† | ,, | சி. தக்ஷிணாமூர்த்தி பிள்ளை | ,, | ஷை கரந்தை. |
| சு† | ,, | R. கோவிந்தசாமி பிள்ளை | ,, | ஷை திருவாரூர். |
| எ† | ,, | R. கிருஷ்ணசாமி பிள்ளை | ,, | ஷை குளித்தலை. |
| அ* | ,, | T. N. குருமூர்த்தி பிள்ளை | ,, | வியாபாரம், திரிசிரபுரம். |
| கூ† | ,, | பா. கலியாணசுந்தரம் பிள்ளை | ,, | உத்தியோகம், கரந்தை. |
| ௰† | ,, | V. கோவிந்தசாமி நாயுடு | ,, | ஷை ஷை |
| கக† | ,, | ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை | ,, | வியாபாரம், ஷை |
| கஉ† | ,, | L. சொக்கலிங்கம் பிள்ளை | ,, | மாணவர், ஷை |
| கங† | ,, | பொ. சுப்பிரமணிய பிள்ளை | ,, | உத்தியோகம், ஷை |
| கச†* | ,, | கோ. கோபாலகிருஷ்ண பிள்ளை | ,, | ஷை திரிசிரபுரம். |
| கரு†* | ,, | நா. துரைசாமி பிள்ளை | ,, | ஷை ஷை |
| கசு | ,, | பக்கீர்மகம்மது சாஹீப் | ,, | மிராசுதார், வல்லம். |
| கஎ‡* | ,, | E. R. நடேச பிள்ளை | ,, | உத்தியோகம், திரிசிரபுரம். |
| கஅ†* | ,, | P. கோவிந்தராஜன் | ,, | உபாத்தியாயர், ஷை |
| ககூ† | ,, | மு. பாலகிருஷ்ண பிள்ளை | ,, | வியாபாரம், கரந்தை. |
| உ௰† | ,, | வீ. சு. சிதம்பரம் பிள்ளை | ,, | ஷை ஷை |

| | | | | |
|---|---|---|---|---|
| உக | ஸ்ரீமான் | சி. சிவராமகிருஷ்ண பிள்ளை | அவர்கள், | வைத்தியர், கரந்தை. |
| உஉ† | ,, | ஐ. குமாரசாமி பிள்ளை | ,, | B. A., வக்கீல், ஷை. |
| உங* | ,, | தி. முனிசாமி முதலியார் | ,, | உத்தியோகம், திரிசிரபுரம். |
| உச | ,, | அ. சுப்பையா பிள்ளை | ,, | வியாபாரம், அறந்தாங்கி. |
| உரு† | ,, | ச. சண்முகம் பிள்ளை | ,, | ஷை கரந்தை. |
| உசு* | ,, | அ. பாலசுப்பிரமணிய பிள்ளை | ,, | உத்தியோகம், திரிசிரபுரம். |
| உஎ* | ,, | தி. பொ. இராமலிங்கம் பிள்ளை | ,, | ஷை ஷை |
| உஅ | ,, | ம. தா. மதார் சாஹீப் | ,, | வியாபாரம், வல்லம். |
| உகூ | ,, | ஆ. மாணிக்கஞ் செட்டியார் | ,, | ஷை ஷை |
| ஙய | ,, | வை. அரங்கசாமி பிள்ளை | ,, | உத்தியோகம், தச்சன்குறிச்சி. |
| ஙக† | ,, | அ. திருவேங்கடஞ் செட்டியார் | ,, | வியாபாரம், கரந்தை. |
| ஙஉ | ,, | த. அ. நாராயணசாமி பிள்ளை | ,, | உத்தியோகம், மதுரை. |
| ஙங* | ,, | N. சுப்பிரமணிய பிள்ளை | ,, | ஷை திரிசிரபுரம். |
| ஙச* | ,, | T. A. சம்பந்தம் பிள்ளை | ,, | ஷை ஷை |
| ஙரு | ,, | E. R. பொன்னுச்சாமி பிள்ளை | ,, | மிராசுதார், செங்கமேடு. |
| ஙசு* | ,, | மு. அருணாசலம் பிள்ளை | ,, | உத்தியோகம், திரிசிரபுரம். |
| ஙஎ | ,, | ச. அ. சாம்பசிவம் பிள்ளை | ,, | ஷை ஜயபுரம். |
| ஙஅ | ,, | த. பீ. சோமநாத ராவ் | ,, | வியாபாரம், தஞ்சை. |
| ஙகூ | ,, | D. கந்தசாமி பிள்ளை | ,, | ஷை கரந்தை. |
| சய | ,, | J. நடேச பிள்ளை | ,, | ஷை தஞ்சை. |
| சக* | ,, | அ. சதாசிவம் பிள்ளை | ,, | உத்தியோகம், திரிசிரபுரம். |
| சஉ | ,, | ச. சந்திரசேகரம் பிள்ளை | ,, | ஷை கோவூர். |
| சங | ,, | D. இரத்தினம் பிள்ளை | ,, | ஷை குளித்தலை. |
| சச | ,, | T. M. இராம்தாஸ் ராவ் மாடிக் | ,, | ஷை தஞ்சை. |
| சரு† | ,, | V. பிச்சைமுத்து முதலியார் | ,, | மிராசுதார், வரகுகோட்டை. |
| சசு† | ,, | கா. சீதாராம பிள்ளை | ,, | உத்தியோகம், கரந்தை. |
| சஎ† | ,, | அ. ஜகராயப் பிள்ளை | ,, | B. A., B. L., வக்கீல், தஞ்சை. |
| சஅ | ,, | அ. அனந்தவிஜய முதலியார் | ,, | வியாபாரம், கரந்தை. |
| சகூ† | ,, | ஆ. முத்துக்குமாரசாமி பிள்ளை | ,, | B. A., வக்கீல், கோவிற்பட்டி. |
| ருய | ,, | R. திருஞானம் பிள்ளை | ,, | உத்தியோகம், தனுக்கோடி. |
| ருக | ,, | கோ. சுப்பிரமணிய பிள்ளை | ,, | வியாபாரம், மன்னார்குடி. |

| | | | | |
|---|---|---|---|---|
| ௫௨ | ஸ்ரீமான் | சொ. முத்தையா பிள்ளை | அவர்கள், | ஒப்பந்தவேலை, தனுக்கோடி. |
| ௫௩ | ,, | க. சாமிநாத பிள்ளை | ,, | உபாத்தியாயர், ஆலத்தூர். |
| ௫௪ | ,, | வே. கந்தசாமிச்சேர்வைகாரர் | ,, | மிராசுதார், ஆலங்குடி. |
| ௫௫ | ,, | மு. அண்ணுசாமி நாயுடு | ,, | உத்தியோகம், தனுக்கோடி. |
| ௫௬ | ,, | கு. பேச்சுமுத்துப் பிள்ளை | ,, | வியாபாரம், சுங்கந்திடல். |
| ௫௭ | ,, | மு. இரத்தினசபாபதி பிள்ளை | ,, | உத்தியோகம், மாதவ போரிடா. |
| ௫௮ | ,, | அ. பாலசுப்பிரமணிய பிள்ளை | ,, | உபாத்தியாயர், கும்பகோணம். |
| ௫௯† | ,, | வீ. நாராயணசாமி பிள்ளை | ,, | மிராசுதார், பட்டுக்கோட்டை. |
| ௬௰† | ,, | த. கி. அருணசலம் பிள்ளை | ,, | உத்தியோகம், தஞ்சை. |
| ௬௧† | ,, | V. பெரியசாமி பிள்ளை | ,, | ஷை கரந்தை. |
| ௬௨ | ,, | ம. சாமிக்குச்சிராயர் | ,, | மிராசுதார், குருங்களூர். |
| ௬௩ | ,, | பொ. சொக்கலிங்கம் பிள்ளை | ,, | ஷை கூடலூர். |
| ௬௪ | ,, | சி. சாமியையாத் தேவர் | ,, | ஷை அருந்தவபுரம். |
| ௬௫ | ,, | S. கோவிந்தசாமிச்செட்டியார் | ,, | உத்தியோகம், பள்ளியக்கிரகாரம். |
| ௬௬†* | ,, | க. மதுரைநாயகம் பிள்ளை | ,, | ஷை திரிசிரபுரம். |
| ௬௭†* | ,, | ச. கோபால பிள்ளை | ,, | ஷை ஷை |
| ௬௮† | ,, | ம. உலகநாத பிள்ளை | ,, | வியாபாரம், தஞ்சை. |
| ௬௯† | ,, | M. S. கலியாணசுந்தரையர் | ,, | வக்கீல், கரந்தை. |
| ௭௰ | ,, | நா. கோதண்டபாணிப்பிள்ளை | ,, | உத்தியோகம், தனுக்கோடி. |
| ௭௧ | ,, | அ. சாமிராவ் | ,, | ஷை தஞ்சை. |
| ௭௨†* | ,, | அ. மதுரைநாயகம் பிள்ளை | ,, | ஷை திரிசிரபுரம். |
| ௭௩ | ,, | க. சாமிநாத பிள்ளை | ,, | ஷை மதுரை. |
| ௭௪ | ,, | மு. நாராயணசாமி நாயுடு | ,, | ஷை வல்லம். |
| ௭௫ | ,, | அ. சுப்பராயலு நாயுடு | ,, | வியாபாரம் ஷை |
| ௭௬ | ,, | T. B. தாஸ் ராவ் | ,, | உத்தியோகம், ஒரத்தநாடு. |
| ௭௭† | ,, | S. இராஜகோபால பிள்ளை | ,, | ஷை தஞ்சை. |
| ௭௮† | ,, | T. இராஜாராம் ராவ் | ,, | ஷை ஷை |
| ௭௯ | ,, | க. முத்தையா செட்டியார் | ,, | வியாபாரம், சிதம்பரம். |
| ௮௰† | ,, | க. சண்முகம் பிள்ளை | ,, | B. A., B. L., வக்கீல், தஞ்சை. |
| ௮௧† | ,, | T. V. சையத்மியான் சாஹீப் | ,, | உபாத்தியாயர், தஞ்சை. |
| ௮௨ | ,, | அல்லிமுத்துப் பிள்ளை | ,, | உத்தியோகம் ஷை |
| ௮௩† | ,, | மா. வே. கோபாலகிருஷ்ணையர் | ,, | வியாபாரம், கரந்தை. |
| ௮௪ | ,, | T. R. விசுவநாத பிள்ளை | ,, | உத்தியோகம், தொழுதூர். |
| ௮௫† | ,, | ஆ. சி. கங்காதர முதலியார் | ,, | ஷை தனுக்கோடி. |

௮௬† ஸ்ரீமான் ம. நடராஜ பிள்ளை அவர்கள், B. A., B. L., வக்கீல், தஞ்சை.

௮௭ ,, ச. கி. பஞ்சநதம் பிள்ளை ,, வியாபாரம், கும்பகோணம்.

௮௮ ,, தி. சுப்புப் பிள்ளை ,, மாணவர், சென்னை.

௮௯ ,, வெ. இராமச்சந்திர ராவ் ,, உத்தியோகம், தனுக்கோடி.

௯௰ ,, து. சுப்புசாமி நாட்டடைரயர் ,, உபாத்தியாயர், ஆச்சாம்பட்டி.

௯௧ ,, மு. கோவிந்தசாமி பிள்ளை ,, வைத்தியம், வல்லம்.

௯௨ ,, மு. அரிஹரபுத்திர செட்டியார் ,, வியாபாரம் ஷை

௯௩†* ,, R. பஞ்சநதம் பிள்ளை ,, உத்தியோகம், திரிசிரபுரம்.

௯௪†* ,, M. நடேச முதலியார் ,, ஷை ஷை

௯௫* ,, T. R. இராஜரத்தினம் பிள்ளை ,, B. A., L. T., உபாத்தியாயர் ஷை

௯௬ ,, அ. சதாசிவக் கண்டியர் ,, மிராசுதார், ஆவாரம்பட்டி.

௯௭† ,, தி. மூ. நாராயணசாமி பிள்ளை ,, B. A., மாணவர், திருவணந்தபுரம்.

௯௮* ,, S. சோமசுந்தரம் பிள்ளை ,, ஷை திரிசிரபுரம்.

௯௯* ,, மு. வேங்கடசாமி நாட்டார் ,, உபாத்தியாயர், ஷை

௱ ,, M. முத்தைய நாட்டார் ,, மிராசுதார், அரசன்குடி.

௱௧* ,, R. நடேச முத்திரியர் ,, மாணவர், திரிசிரபுரம்.

௱௨* ,, தி. சு. துரைசாமி பிள்ளை ,, மிராசுதார், ஷை

௱௩ ,, த. பொ. கை. அழகிரிசாமி பிள்ளை ,, B. A., உத்தியோகம், மகரநோம்புச்சாவடி.

௱௪ ,, சு. சாமிநாத ராவ் ,, ஷை தஞ்சை.

௱௫ ,, க. பொன்னுச்சாமி பிள்ளை ,, சங்கீத வித்துவான். தஞ்சை.

௱௬ ,, T. V. சதாசிவப் பண்டாரத்தார் ,, உத்தியோகம், பாவநாசம்.

௱௭† ,, சா. வேங்கடராம ஐயர் ,, உபாத்தியாயர், கும்பகோணம்.

௱௮ ,, சா. சிவராம பிள்ளை ,, வியாபாரம், தஞ்சை.

௱௯† ,, T. S. சுப்பையா பிள்ளை ,, உத்தியோகம், குடகு.

௱௰ ,, T. G. மாணிக்கம் பிள்ளை ,, ஷை தஞ்சை.

௱௰௧ ,, சொ. மதுரையா பிள்ளை ,, மிராசுதார், சந்தலை.

௱௰௨ ,, அ. பொன்னுச்சாமி பிள்ளை ,, ஷை கரந்தை.

௱௰௩ ,, வா. அப்புசாமி நாயுடு ,, ஷை விடையபுரம்.

௱௰௪ ,, ச. வீராசாமி நாயுடு ,, உத்தியோகம், நாகைப்பட்டினம்.

௱௰௫ ,, T. S. சீனிவாச ராஜா ,, ஷை ஷை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ௱௧௬ | ஸ்ரீமான் | S. மகாலிங்கம் பிள்ளை | அவர்கள், | உத்தியோகம், | மகரநோம்புச் சாவடி. |
| ௱௧௭ | ,, | T. S. கணபதி பிள்ளை | ,, | ஷை | ஷை |
| ௱௧௮ | ,, | சா. மாணிக்கம் பிள்ளை | ,, | ஷை | தஞ்சை. |
| ௱௧௯* | ,, | R. அருணாசலம் பிள்ளை | ,, | ஷை | திரிசிரபுரம். |
| ௱௨௰* | ,, | K கிருஷ்ணமாச்சாரியார் | ,, | ஷை | ஷை |
| ௱௨௧ | ,, | T. G. வீரபத்திர பிள்ளை | ,, | ஷை | குளித்தலை. |
| ௱௨௨ | ,, | நா சண்முக முதலியார் | ,, | மிராசுதார், | பனையூர். |
| ௱௨௩ | ,, | அ. சாமிநாத முதலியார் | ,, | ஷை | ஷை |
| ௱௨௪ | ,, | ஆ. சா பழனியாண்டிப்பிள்ளை | ,, | ஷை | ஆற்காடு. |
| ௱௨௫ | ,, | அ. கிருஷ்ணசாமித் தேவர் | ,, | ஷை | வாட்டார். |
| ௱௨௬* | ,, | V. சுப்பராய முதலியார் | ,, | உத்தியோகம், | திரிசிரபுரம். |
| ௱௨௭†* | ,, | தி. கூரத்தாழ்வார் முதலியார் | ,, | ஷை | ஷை |
| ௱௨௮ | ,, | அ. கந்தசாமி பிள்ளை | ,, | உபாத்தியாயர், | கோயமுத்தூர். |
| ௱௨௯ | ,, | நடேச செட்டியார் | ,, | மிராசுதார், | நீடாமங்கலம். |
| ௱௩௰†* | ,, | க. கிருஷ்ண பிள்ளை | ,, | மாணவர், | திரிசிரபுரம். |
| ௱௩௧* | ,, | S. செல்லப்ப முதலியார் | ,, | உத்தியோகம், | ஷை |
| ௱௩௨ | ,, | C. சச்சிதானந்தம் பிள்ளை | ,, | ஷை | தஞ்சை. |
| ௱௩௩ | ,, | அ. சதாசிவம் பிள்ளை | ,, | ஷை | கரந்தை. |
| ௱௩௪ | ,, | G. சுப்பராய பிள்ளை | ,, | ஷை | ஷை |
| ௱௩௫ | ,, | இ. மகம்மதுகன்னி சாஹீப் | ,, | வியாபாரம், | வல்லம். |
| ௱௩௬ | ,, | வே. முத்துசாமிக் கண்டியர் | ,, | மிராசுதார், | சுங்கந்திடல். |
| ௱௩௭† | ,, | அ. முருகைய செட்டியார் | ,, | ஷை | நீடாமங்கலம். |
| ௱௩௮ | ,, | க. தம்புசாமிச் செட்டியார் | ,, | ஷை | ஷை |
| ௱௩௯† | ,, | S. சோமசுந்தர முதலியார் | ,, | உத்தியோகம், | தஞ்சை. |
| ௱௪௰† | ,, | வே. இராமச்சந்திர பிள்ளை | ,, | ஷை | மாயவரம். |
| ௱௪௧ | ,, | நா. பொன்னுச்சாமி பிள்ளை | ,, | வியாபாரம், | தஞ்சை. |
| ௱௪௨ | ,, | D. K. சுப்பையா நாயுடு | ,, | ஷை | ஷை |
| ௱௪௩ | ,, | த. சி. துரைசாமி பிள்ளை | ,, | உத்தியோகம், | ஷை |
| ௱௪௪ | ,, | ஸ்ரீ. அரங்கசாமி வன்னியர் | ,, | மிராசுதார், | கூடலூர். |
| ௱௪௫ | ,, | சா. சச்சிதானந்தத் தஞ்சிராயர் | ,, | ஷை | ஷை |
| ௱௪௬ | ,, | து. முத்துக்குமாரசாமித் தஞ்சிராயர் | ,, | ஷை | ஷை |
| ௱௪௭ | ,, | சு. காமாட்சியா பிள்ளை | ,, | ஷை | குளமங்கலம். |
| ௱௪௮ | ,, | வ. சிவராம பிள்ளை | ,, | ஷை | ஆலத்தூர். |
| ௱௪௯ | ,, | சா. சுப்பராய பிள்ளை | ,, | வியாபாரம், | ஷை |
| ௱௫௰ | ,, | A. கோவிந்தசாமி பிள்ளை | ,, | மிராசுதார், | ஷை |
| ௱௫௧ | ,, | சி. வைத்தியலிங்கம் பிள்ளை | ,, | ஷை | ஷை |
| ௱௫௨ | ,, | V. சிவசாமி பிள்ளை | ,, | ஷை | ஷை |
| ௱௫௩ | ,, | சா. குப்புசாமி முதலியார் | ,, | உத்தியோகம், | மணக்கால். |
| ௱௫௪ | ,, | P. சுப்பையா முதலியார் | ,, | மிராசுதார், | ஆலத்தூர். |
| ௱௫௫†* | ,, | P. கந்தசாமி முதலியார் | ,, | உத்தியோகம், | திரிசிரபுரம். |

† புத்தகசாலைக்கும் அங்கத்தினர். * திருச்சிக்கிளை அங்கத்தினர்.

# அநுபந்தம் ௨.

## கரந்தைத்தமிழ்ச்சங்கம்,
## தஞ்சை.

### இராக்கத—நள வருடத்தில் புத்தகங்கள் உதவியவர்களின் விவரம்.

| | | | | | பிரதிகள். |
|---|---|---|---|---|---|
| ௧. | | கரந்தைத் தமிழ்ச்சங்கம் (விலைக்கு வாங்கியன.) | | | 8 |
| ௨. | கனம் | வீ. சுப்பராய பிள்ளை அவர்கள், கரந்தை | | | 33 |
| ௩. | ,, | த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், B. A, B. L., | | கரந்தை | 10 |
| ௪. | ,, | M. S. கலியாணசுந்தரமையர் அவர்கள்; கரந்தை | | | 7 |
| ௫. | ,, | T. R. கிருஷ்ணசாமி பிள்ளை | ,, | குளித்தலை | 5 |
| ௬. | ,, | வேங்கடராம ராஜா | ,, | தஞ்சை | 5 |
| ௭. | ,, | பொ. சுப்பிரமணிய பிள்ளை | ,, | கரந்தை | 4 |
| ௮. | ,, | வீ. நாராயணசாமி பிள்ளை | ,, | பட்டுக்கோட்டை | 3 |
| ௯. | ,, | T. கனகசுந்தரம் பிள்ளை | ,, | B. A., சென்னை | 3 |
| ௰. | ,, | P. கந்தசாமி முதலியார் | ,, | திரிசிரபுரம் | 2 |
| ௰௧ | ,, | K நடேச ஐயர் | ,, | தஞ்சை | 2 |
| ௰௨. | ,, | வே. தில்லைநாயகம் பிள்ளை | ,, | சிதம்பரம் | 2 |
| ௰௩. | ,, | R. திருஞானம் பிள்ளை | ,, | தனுக்கோடி | 2 |
| ௰௪. | ,, | A. K. கோபாலகிருஷ்ண ஐயர் | ,, | — | 1 |
| ௰௫ | ,, | கு. பேச்சுமுத்துப் பிள்ளை | ,, | சுங்கந்திடல் | 1 |
| ௰௬. | ,, | ஆ. சபாபதி பிள்ளை | ,, | கரந்தை | 1 |
| ௰௭. | ,, | S. சந்திரசேகரம் பிள்ளை | ,, | கோவூர் | 1 |
| ௰௮. | ,, | T. B. சோமநாத ராவ் | ,, | தஞ்சை | 1 |
| ௰௯. | ,, | சிவ. சோலைமுத்துப் பிள்ளை | ,, | ,, | 1 |
| ௨௰. | ,, | S. A. சாம்பசிவம் பிள்ளை | ,, | ஜயபுரம் | 1 |
| ௨௧. | ,, | கலியப்பெருமாள் பிள்ளை | ,, | நீடாமங்கலம் | 1 |
| ௨௨. | ,, | இராம்தாஸ் ராவ் மாடிக் | ,, | தஞ்சை | 1 |
| ௨௩. | ,, | N. சுப்பிரமணிய பிள்ளை | ,, | திரிசிரபுரம் | 1 |
| ௨௪. | ,, | V. இராதாகிருஷ்ண பிள்ளை | ,, | B. A., தனுக்கோடி | 1 |
| ௨௫. | ,, | இஸ்மால்சா ராவுத்தர் | ,, | வல்லம் | 1 |
| ௨௬. | ,, | வேலு முதலியார் | ,, | — | 1 |

## அநுபந்தம் ௩.

## கரந்தைத்தமிழ்ச்சங்கம், தஞ்சை.

### திரிசிரபுரம் கிளை.

சீர்மலி சிறப்பிற் பேர்மலி இக்கிளை எல்லாம் வல்ல இறைவன் திருவருட் பெருக்கால் தனது மூன்ருவது ஆண்டின் நிறைவைப் பெற்றது.

**௧. உறுப்பினர்.**

இவ்வாண்டின் தொடக்கத்தில் இதன் உறுப்பினராயிருந்தோர் பத்தொன்பதின்மர்; இவருள் இடையே நீங்கினுர் நால்வர் போக நின்ருருடன் இவ்வாண்டில் புதியராய்ச் சேர்ந்தார் பதினைவரும் தொக உறுப்பினர் முப்பதின்மராவர்.

**௨. கூட்டங்கள்.**

இவ்வாண்டில் ஏழு கூட்டங்கள் நிகழ்ந்தன. அவற்றில் ஒன்று காரியக் கூட்டம். மற்றைய கூட்டங்களில் பிரசங்கங்களும், கம்ப ராமாயணப் பாடமும் நடந்தன. இவ்வகைக் கூட்டங்கள் மிகுதியாக நிகழப் பெருமையின், உறுப்பினர் பலரும் தமது நன்மைக்குரிய இவ்வழிகளில் அவாவும் ஊக்கமுமுடையராய்த் தமக்கேற்படும் சாதனங்களைத் தக்கவாறு உபயோகித்துக்கொள்ளுகின்றனரெனச் சொல்லமுடியவில்லை. எனினும், ஒரு சிலரேனும் தமிழ்ப் பயிற்சியிற் பேரவாக் கொண்டு பண்டிதர் கனம் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களிடம் திருக்குறளும், நன்னூலும் பயின்று வருவதானது மகிழ்ச்சி விளைக்கின்றது.

**௩. வருவாய்.**

இக்கிளையின் வரும்படி கீழ்க் காட்டிய விவரணப்படி ஆதும்:—

| | | |
|---|---|---|
| சங்கவுறுப்பினர் சந்தா | ரூ. | 54-12—0 |
| புத்தகசாலையுறுப்பினர் சந்தா | ரூ. | 6—6—0 |
| நன்கொடை | ரூ. | 8—4—3 |
| ஆக | ரூ. | 69—6—3. |

பண்டிதர் கனம் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் நமது கிளைச் சங்கத்தினரைப் பயிற்றித் தேற்ற முன்வந்தது ஒரு சிறிதும் கைம்மாறு கருதாது, தமிழிடத்தும், தமிழ் மக்களிடத்தும் அவர்கள் கொண்டுள்ள அன்பு காரணமாகவே. அங்ஙனமாயினும், அவர்களது உண்மையன்பிற்குவந்த நமது தாய்ச்சபையார் தமது நன்றி யறிவிற்கறிகுறியாகப் பண்டிதரவர்களுக்கு வெள்ளிக்கிண்ணமொன்று சன்மானித்தனர்.

## ச. மாணவர் விடுதி.

சென்ற ஆண்டின் அறிக்கையில் மாணவர் விடுதி ஒன்று ஏற்படவேண்டிய ஆவசியகத்தைப்பற்றிக்கூறி அங்ஙனமே ஏற்படவுங்கூடுமெனக் குறிப்பித்தபடி 1915ஆம் ஜூலைமீ 5உ 'பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்த' உதியன்சேரலாதனின் ஞாபகமாக 'உதியன் விடுதி' என்றபெயருடன் திரிசிரபுரம் கோட்டையில் ஓர் தமிழ மாணவர் விடுதி தோன்றுவதாயிற்று. அங்ஙனம் தோன்றிய அதுதான் சங்கத்தாரின் இடையறா மெய்ம்முயற்சி முதலியவற்றைப்பெற்றுச் செவ்விதின் நடைபெற்று வந்ததாயினும், அது நிலைத்து நடைபெறாவாறு சில பல தடைகள் நேர்ந்தன. அவற்றுள், பொருளில்லாதது பொதுவகையான ஓர் தடையானாலும், இவ்விடுதி தோன்றிய பின்னர் பரி. சூசையப்பன் கலாசாலையார் தமது கலாசாலை மாணவர்கள்பாற் பரிவுகூர்ந்து ஓர் பிரத்தியேகமான விடுதி ஏற்படுத்தி அவர்கள் அங்குத்தானே உண்ணவேண்டுமென வற்புறுத்தியது முதலான சில காரணங்களால் உதியன் விடுதியில் உண்டுவந்த மாணவர்களின் தொகை நாளடைவிற் சுருங்கியது ஓர் முக்கியமான தடையாகும். இன்ன காரணங்களால், தமிழ மாணவர்களுக்குப்பெரிதும் சௌகரியம் செய்ய வேண்டுமென்னுங் கருத்துடைய இச்சங்கத்தார் தாம் கருதியவாறு நடத்தமுடியவில்லை யென்றாலும், மாணவர்களிற் பெரும்பான்மையோருக்கு வசதி ஏற்பட்டுவிட்டதால் சங்கத்தார் இப்பொழுது சிரமத்துடன் நடத்தவேண்டிய அவசியம் இல்லையென நினைத்து, 1916ஆம் ஜனவரிமீ 31உக்குப் பின் நிறுத்தி வைத்திருக்கின்றனர். தக்காருதவியும், இறைவனருளும் கூடின், பின் இது நடைபெறுதலும் கூடும். இவ்விடுதி நடைபெற்ற காலத்தில் இதன் பொறுப்பாளர் பதவியை வகித்து கனம்

T. N. குருமூர்த்தி பிள்ளை அவர்கள், 'மெய்வருத்தம் பாரார்' என்னும் பாட்டுக்கிலக்காக உழைத்து வந்தார்கள். இங்ஙனமே கனம் R. சிவகடாட்சம் பிள்ளை அவர்களும் உழைத்து வந்தார்கள். இவர்களுழைப்பு, தமிழ்மக்கள் பாலிருந்த அன்பு காரணமாகவே யன்றி வேறன்று. இவ்விடுதியினால் சங்கத்திற்கேற்பட்ட பணப்பொறுப்பு ரூ. 150—1—3ல் விடுதியின்பொருட்டு வாங்கிக் கைவசமிருக்கும் பாத்திரங்கள் வகையில் அடங்கிய ரூ. 60—1—3 போக உண்மையில் நஷ்டமானது ரூ. 90—0—0 ஆகும். எனினும், இதைவிட மாணவர்களுக்குப் போதிய சௌகரியம் செய்யப்பெறாதிருந்ததே பெரு நஷ்டமாகக் கருதப்படுகிறது. இங்ஙனம் விடுதிக்கேற்பட்ட தொகை நஷ்டத்தை இக்கிளையுறுப்பினர் சிலர் நிவர்த்தித்து விடுவதாக அன்புடன் வாக்களித்திருக்கின்றனர்.

## ௫ நன்றிகூறல்.

யாம் தமிழறிவாராய்ச்சிகளிற் சிறக்கவேண்டுமென மிகப் பரிந்து எமக்குள்ளன்புடன் பாடஞ்சொல்லிவரும் பண்டிதர் கனம் மு. வேங்கடசாமி நட்டார் அவர்களுக்கும், வழக்கம்போல் எமக்கு வேண்டிய புத்தகம், பத்திரிகை முதலியவைகளை யுதவிவரும் தாய்ச்சங்கத்தார்க்கும், தலைவரவர்கட்கும் இக்கிளைச் சங்கத்தினர் மிகுதியும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர் என்பதை ஈண்டுக்குறிப்பிடுகின்றேன். மற்றும், இச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற 'உதியன் விடுதி' யில் பொறுப்பாளர் பதவியை வகித்து, ஒரு சிறிதும் பயன் கருதாமலும், பல்லோர்கூறிய பழிமொழிகளைச் சிந்தையிற் கொள்ளாமலும் உழைத்து வந்தவர்களான கனம் T. N. குருமூர்த்தி பிள்ளை அவர்களுக்கும், கனம் R. சிவகடாட்சம் பிள்ளை அவர்களுக்கும், எங்கட்குப் பலவாறு உதவிபுரிந்து வந்த பண்டிதர் கனம் D. சவரிராய பிள்ளை, M. R. A. S., அவர்களுக்கும், கனம் T. R. இராஜரத்தினம் பிள்ளை, B. A., L. T., அவர்களுக்கும், கனம் N. சுப்பிமணிய பிள்ளை அவர்களுக்கும், இதற்குப் பொருள் கொடுப்பதாக வாக்களித்துள்ள உண்மையன்பர்களுக்கும் யாம் நன்றியறியும் கடப்பாடுடையேம். சுபம்.

திரிசிரபுரம்,
நள ௵ ஆனி ௴.

அ. கணபதி,
கிளைக்காரியதரிசி.

# அநுபந்தம் ௪.

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

### இராக்கத—ஙள வருடத்தில் வரவு செலவு விவரம்.

| வரவு. | தொகை. ரூ. | அ. | ப. | செலவு. | தொகை. ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| சென்ற வருடக்கடைசியில் பாக்கி | 400 | 1 | 1 | அச்சுக்கூலி ... ... ... ... ... | 15 | 0 | 0 |
| இவ்வருடத்தில் சந்தா— | | | | ஸ்டேஷனரி ... ... ... ... ... | 0 | 4 | 6 |
| மாதச்சந்தா ரூ. 266—8—0 | | | | தபால், தந்தி ... ... ... ... ... | 3 | 3 | 6 |
| புத்தகசாலைச் சந்தா ரூ. 27—6—0 | 293 | 14 | 0 | சங்கத்திற்குப் புத்தகம் வாங்கியது ... ... ... | 20 | 8 | 0 |
| நன்கொடை ... ... ... | 528 | 14 | 6 | நான்காவது வருடத் திருவிழாச் செலவு ... ... | 292 | 15 | 10 |
| புத்தகம் விற்றுமுதல் ... ... | 1 | 9 | 0 | புத்தகங்கட்டுக் கூலி ... ... | 11 | 12 | 0 |
| பரீட்சைப் பிரவேச கட்டணம் ... | 2 | 0 | 0 | கல்விப்பயிற்சிக்கு உபகாரச் சம்பளம் ... ... | 21 | 0 | 0 |
| சேமப் பொருட்கு வட்டி ... | 9 | 0 | 0 | சங்கத்திற்குப் பீரோ 1 வாங்கியது ... ... | 35 | 0 | 0 |
| | | | | பாடம் சொல்லுபவர்க்கு வண்டிச்சத்தம், சன்மானம்.. | 25 | 0 | 0 |
| | | | | "உதியன்" மாணவர் விடுதிக்குக் கைம்மாற்றுக்கடன். | 129 | 15 | 6 |
| | | | | பாக்கியிருப்பு.— | | | |
| | | | | சங்கத்தலைவர்வசம் ரூ. 452-5-11 | | | |
| | | | | பொருளாளர் வசம் ரூ. 228-5—4 | 680 | 11 | 3 |
| மொத்தம் ... | 1,235 | 6 | 7 | மொத்தம் ... | 1,235 | 6 | 7 |

தஞ்சை, கரந்தை.
ஙள ஞூ ஆனிமீ ௨௳ } பரிசோதனையிற் சரியெனக் காணலாயிற்று.

R. வேங்கடாசலம்,
காரியதரிசி.

ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை,
பொருளாளர்.

பா. கல்யாணசுந்தரம்,
கணக்குப்பரிசோதகர்.

# THE KARANTHAI TAMIL SANGAM,
## Tanjore.

*Registered under Act XXI of 1860 of the Governor-General of India in Council.*

**Founded on the 14th May, 1911.**

OBJECTS.

1. To advance and improve the cause and condition of Tamil and Tamilians.

2. To promote friendly and social intercourse among the members.

3. To maintain the Charitable Institutions of the Tamilians.

4. To afford, as far as practicable, facilities for the physical, moral, social and mental improvement of the members.

5. To help the industrial and economic advancement of the Tamilians.

These objects are to be attained by organising lectures and debates, maintaining reading rooms and libraries, holding tuition classes, publishing books, magazines and tracts, carrying on original researches, establishing Industrial and Technical Institutions, Tamil Schools and Colleges, undertaking Translations from other languages and production of original works on Sciences, management of Charitable and Educational Institutions and Trusts entrusted to the Sangam, holding Conferences etc. etc.

All interested in the cause are welcome to become Members.

# தமிழ்.

சங்கநிதி பதுமநிதி
யிரண்டுந் தந்து
தரணியொடு வானளத்
தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம்
மதிப்போம் அல்லேம்
மாதமிழுக் கேகாந்தர்
அல்ல ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு
தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும்
புலைய ரேனும்
தங்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர்
அன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்குங்
கடவு ளாரே.